## 11ம் வகுப்பு உயிரி விலங்கியல்

## 8. கழிவுநீக்கம்

1. மனிதனின் கழிவு நீக்கத்தில் கீழ்காணும் கூற்றுகளில் எவை உண்மையானவை? (AIIMS 2013)
    1. குளுக்கோஸ் மற்றும் அமினோ அமிலங்கள். எளிய பரவல் முறையில் PCT மூலம் உறிஞ்சப்படுகிறது.
    2. DCT நீர் மூலக்கூறுகளை உள்ளே ஊடுருவ அனுமதிக்காது.
    3. ஒரு நாளைக்கு சராசரியாக 25 முதல் 30 கிராம் யூரியா வெளியேற்றப்படுகிறது.
    4. ஹென்லே வளைவில் அதிகபட்ச உறிஞ்சுதல் நடைபெறுகிறது.

2. சிறுநீர்ப்பையின் சுவர்களில் உள்ள நீட்சி உணர்விகள் முற்றிலும் நீக்குவதால் ஏற்படுவது (AIMPT 2009 P)
    1. சிறுநீர் கழித்தல் இருக்காது
    2. சிறுநீர்ப்பையில் சிறுநீர் சாதாரணமாக தொடர்ந்து சேகரிக்கப்படும்
    3. சிறுநீர் கழித்தல் தொடரும்
    4. சிறுநீர்ப்பையில் சிறுநீர் சேகரிக்காது

3. மனித சிறுநீரகங்களில் கழிவு நீக்கம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது எது? (AIPMT 2010)
    1. ஹென்லே வளைவு இறங்குகுழலில் நீர் ஊடுருவ முடியாது
    2. சேய்மை சுருண்ட குழலில் $HCO_3$ மீண்டும் உறிஞ்சும் திறனற்றது
    3. கிளாமரூலார் வடிதிரவத்தில் சுமார் 99% சிறுநீரக குழல்களால் மீள உறிஞ்சப்படுகிறது.
    4. ஹென்லே வளைவின் ஏறுகுழலில் (எலக்ட்ரோ-லைட்டுகள்) ஊடுருவ முடியாது

4. மனிதர்களில் முக்கிய நைட்ரஜன் கழிவுப் பொருட்களை உற்பத்தி செய்வது (AIPMT 2010)
    1. சிறுநீரகங்களைவிட அதிக அளவு கல்லீரலில் வெளியேற்றுகிறது
    2. சிறுநீரகம் உற்பத்தி செய்து சிறுநீரகமே வெளியேற்றுகிறது
    3. கல்லீரல் உற்பத்தி செய்து பித்தநீர் வழியே வெளியேற்றுகிறது
    4. கல்லீரல் உற்பத்தி செய்கிறது. ஆனால் சிறுநீரகம் வெளியேற்றுகிறது.

5. பொருள் வழிகடத்தலில் $Na^+$ மூலம் கீழ்கண்டவற்றில் எது உறிஞ்சப்படுகிறது?(AIPMT 2010)
    1. அமினோ அமிலங்கள் & குளுக்கோஸ்
    2. குளுக்கோஸ் & கொழுப்பு அமிலங்கள்
    3. கொழுப்பு அமிலங்கள் & கிளிசரால்
    4. பிரக்டோஸ் & சில அமினாஅமிலங்கள்

6. கீழ்கண்ட எந்த சரியான கூற்று மனித சிறுநீரக கழிவு நீக்கத்துடன் தொடர்புடையது .

(CBSE PRE 2010)

1. ஹென்லேயின் வளைவு ஏறு குழல் பகுதியில் எலக்ரோலைட்டுகளால் ஊடுருவ முடியாதது.
2. ஹென்லே வளைவின் இரங்கு குழல் பகுதியில் நீர் ஊடுருவ முடியாதது.
3. சேய்மை சுருண்ட குழல் $HCO_3$ யை மீண்டும் உறிஞ்சும் திறனற்றது.
4. குளோமமூலார் வடிகட்டியலில் கிட்டதட்ட 99 சதவீதம் சிறுநீரக குழல்களில் மீண்டும் உறிஞ்சப்படுகிறது.

7. உடல் திரவத்தில் குறைந்த அளவு Ca இந்நோய்க்கு காரணமாகிறது. (CBSE PRE 2010)

1. கௌட்
2. டெட்டணி
3. இரத்த சோகை
4. ஆஞ்சியோ பெக்டோரிஸ்

8. மனிதர்களில் முதன்மையான நைட்ரஜன் கழிவு பொருள் எங்கு உற்பத்தியாகிறது?

(CBSE PRE 2010)

1. கல்லீரல் – ஆனால் பெரும்பாலும் சிறுநீரகங்களால் வெளியேற்றப்படுகிறது.
2. சிறுநீரகங்களில் ஆனால் பெரும்பாலும் கல்லீரல் மூலம் வெளியேற்றப்படுகிறது.
3. சிறுநீரங்களில், சிறுநீரகங்களால் வெளியேற்றுப்படுகிறது.
4. கல்லீரல் மற்றும் பித்தநீரால் வெளியேற்றப்படுகிறது.

9. கீழ்கண்ட எந்த செல்கள் எரித்ரோ பாய்டின் ஹார்மோனை சுரக்க தூண்டுகிறது? (NEET 2021)

1. கணைய செல்கள்
2. அட்ரினோ ஹைபோபைசிஸில் உள்ள ரோஸ்ட்ரல்
3. எலும்பு மஞ்ஜை செல்கள்
4. சிறுநீரக ஜக்ஸ்டா குளோமருலஸ் செல்கள்

10. காற்று நுண்ணறைகளில் ஆக்ஸிஹீமோகுளோபின் உருவாக சாதகமான சூழலை தேர்ந்தெடு

(NEET 2021)

1. அதிக $O_2$ அழுத்தம், குறைந்த $CO_2$ அழுத்தம், குறைந்த $H^+$, குறைந்த வெப்பநிலை
2. குறைந்த $O_2$ அழுத்தம், அதிக $CO_2$ அழுத்தம், அதிக $H^+$, அதிக வெப்பநிலை
3. அதிக $O_2$ அழுத்தம், அதிக $CO_2$ அழுத்தம், குறைந்த $H^+$, அதிக வெப்பநிலை
4. குறைந்த $O_2$ அழுத்தம், குறைந்த $CO_2$ அழுத்தம், அதிக $H^+$, அதிக வெப்பநிலை

11. $O_2$ பகுதி அழுத்தம் மற்றும் $CO_2$ ன் பகுதி அழுத்தமானது காற்று நுண்ணறைகளில் விரவல் பகுதி அழுத்தம்? (NEET 2021)

1. $O_2$ அழுத்தம் - 104 மற்றும் $CO_2$ அழுத்தம் - 40
2. $O_2$ அழுத்தம் - 40 மற்றும் $CO_2$ அழுத்தம் - 45
3. $O_2$ அழுத்தம் - 95 மற்றும் $CO_2$ அழுத்தம் - 40
4. $O_2$ அழுத்தம் - 159 மற்றும் $CO_2$ அழுத்தம் - 0.3

12. கூற்று : அடர்குறைவு சிறுநீர் உற்பத்தியானது சிறுநீரகத்தின் நீரிழப்பைத் தடுக்க உதவுகிறது.

காரணம்: அடர்வு குறைவான சிறுநீரானது அதிக அடர்வுடையது மற்றும் இரத்தத்தில் உள்ள ஊடு கலப்பு அழுத்தத்தை விட அதிகமானது. (AIIMS 2007)

1. காரணமும் கூற்றும் உண்மையானால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமாகும்
2. காரணமும் கூற்றும் சரியானால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமல்ல
3. கூற்றும் சரியானால் காரணம் தவறானது
4. காரணம் மற்றும் கூற்று இரண்டுமே தவறானது.

13. கூற்று(கூ) : ஆல்டோஸ்டீரான் என்பது ஓர் ஸ்டீராய்டு ஹார்மோன் மற்றும் இவை பாலுட்டியில் சோடியம், பொட்டாசியம், அயனி நெறிபடுத்துவதில் முக்கியத்துவம் வாய்ந்தது.

காரணம்(கா) : இது ECFல் சோடியம் அளவை அதிகரிக்கிறது. இது சிறுநீரக நுண்குழல்களில் சோடியம் மீண்டும் உறிஞ்சப்படுவதையும், சிறுநீரில் பொட்டாசியம் வெளியேற்றப்படுவதாலும் நடைபெறுகிறது. (AIIMS 2007)

1. காரணமும் கூற்றும் உண்மையானால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமாகும்
2. காரணமும் கூற்றும் சரியானால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கமல்ல
3. கூற்றும் சரியானால் காரணம் தவறானது
4. காரணம் மற்றும் கூற்று இரண்டுமே தவறானது.

14. பாலூட்டிகளில் நெப்ரானின் ஹென்லே வளைவு இல்லையெனில் கீழ்கண்டவற்றுள் எது நிகழலாம்? (AIPMT 2003)

1. சிறுநீர் உற்பத்தி ஆகாது
2. சிறுநீர் உருவாதலில் தரம் மற்றும் அளவில் மாற்றம் இருக்காது
3. அடர்வு மிகுந்த சிறுநீர்
4. அடர்வு குறைந்த சிறுநீர்

15. சிறுநீர்ப்பை சுவரிலுள்ள நீட்சி உணர்வேற்பிகளை முற்றிலும் நீக்கிவிட்டால் நிகழ்வது. (CBSE PM/PD 2009)

1. சிறுநீர் வெளியேற்றம் தொடர்ந்து நிகழும்.
2. சிறுநீர்பையில் பொதுவாக சிறுநீர் தொடர்ந்து சேகரிக்கப்படும்
3. சிறுநீர் வெளியேற்றம் இல்லை.
4. சிறுநீர்ப்பையில் சிறுநீர் சேகரிக்கப்படுவது இல்லை.

16. நைட்ரஜனை முக்கிய பொருட்களை கொண்ட யூரிக் அமிலத்தை கழிவாக வெளியேற்றும் உயிரி (CBSE PM/PD 2009)

1. மண்புழு 2. கரப்பான் பூச்சி 3. துவளை 4. மனிதன்

17. கீழே கொடுக்கப்பட்டுள்ள எது சிறுநீரக பிரமிடு பகுதி கிடையாது? (AIPMT PRE 2011)

1. ஹென்லியின் வளைவு
2. வெளி குழாயின் நுண்குழாய்கள்
3. சுருண்ட குழாய்கள்
4. சேகரிக்கும் குழாய்கள்

18. கீழ்கண்டவற்றுள் யூரியோடெலிக் முறையில் நைட்ரஜன் கழிவுகளை வெளியேற்றுவது (AIPMT PRE 2011)

1. பூச்சிகள் மற்றும் இருவாழ்விகள்
2. ஊர்வன மற்றும் பறவைகள்
3. பறவைகள் மற்றும் வளைத்தசைபுழுக்கள்
4. இருவாழ்விகள் மற்றும் ஊர்வன

19. கீழ்கண்ட படம் வாயு பரிமாற்றம் நடைபெறும் நுரையீரலின் ஒரு பகுதியாகும். இதில் குறிக்கப்பட்டுள்ள A,B,C அல்லது D ஆகியவற்றில் எது சரியான வாயு பரிமாற்ற பகுதி மற்றும் பணியை குறிப்பதாகும். (AIPMT PRE 2011)




1. B: இரத்த சிவப்பணுக்கள் – கார்பன் டை ஆக்சைடை கடத்தல்
2. C: நுண்தமனி – திசுக்களுக்கு ஆக்சிஜனை கடத்துதல்
3. A:காற்று நுண்ணறை இடைவெளி – வாயு பரிமாற்றம் நடைபெறும் இடம்
4. D:இரத்த நுண்ணறை சுவர்கள் – ஆக்சிஜன் மற்றும் கார்பன் டை ஆக்சைடு பரிமாற்றம் நடைபெறும் இடம்

20. கீழ்கண்டவற்றுள் சிறுநீரக செயல்பாட்டைப்பற்றிய சரியான கூற்று (AIPMT PRE 2011)

1. கோடைக்காலத்தில் வியர்வை மூலம் வெளியேறும் நீரிழப்பு ADH வெளியேறுவதை தடுக்கிறது.
2. அதிகப்படியான நீர் அருந்தும் நேரங்களில் ADH வெளியேறுவது தடுக்கப்படுகிறது
3. நிலையான வெப்பநிலையில் ADH வெளியேறுவது தூண்டப்படுகிறது.
4. அதிகப்படியான குளோமருலார் இரத்த ஓட்டம் ஆஞ்சியோடென்சின் 11 அமைப்பை தூண்டுகிறது.

21. அடினைன் மற்றும் குவரனைன் வளர்சிதை மாற்ற மனித கழிவுப் பொருள் எது? (AIIMS 1997)

1. யூரிக் அமிலம்
2. யூரியா
3. ஆலன்டானின்
4. அம்மோனியா

22. மனிதனின் கீழ்க்கண்ட எப்பொருள் கணையத்திலிருந்து முன் சிறுகுடலுக்கு கடத்தப்படுகிறது. (AIPMT MAIN 2011)

1. எண்டிரோகைனேஸ்
2. ட்ரிப்சினோஜன்
3. கைமோட்ரிப்சின்
4. ட்ரிப்சின்

23. மால்பீஜியன் நுண்குழல் என்பது (AIPMT 1990)

1. பூச்சிகளுடைய கழிவுநீக்க உறுப்பு
2. வளைதசைப்புழுக்களின் கழிவுநீக்க உறுப்பு
3. பூச்சிகளின் சுவாச உறுப்பு
4. வளைதசைப் புளுக்களின் சுவாச உறுப்பு

24. அண்மை சுருண்ட சுழல் மற்றும் சேய்மை சுருண்ட குழல் உள்ளது (AIPMT 1990)

1. விந்து நுண்குழல்கள்
2. நெ.ஃப்ரான்
3. அண்டநாளம்
4. வாஸ் டிபரன்ஸ் (விந்து குழல்கள்)

25. தூரிகை முனை இதன் சிறப்புப் பண்பு (AIPMT 1990)

1. நெ.ஃப்ரானின் கழுத்துப் பகுதி
2. சேகரிக்கும் குழல்
3. அண்மை சுருண்ட பகுதி
4. இவை அனைத்தும்

26. நைட்ரஜன் கழிவுப் பொருட்கள் குறிப்பாக எவ்வாறு வெளியேற்றப்படுகிறது? (AIPMT 1991)

1. தலைப்பிரட்டையில் யூரியாவாகவும், முதிர்ந்த தவளையில் அம்மோனியாகவும் வெளியேற்றப்படுகிறது.
2. தலைப்பிரட்டையில் அமோனியாகவும், தவளையில் யூரியாவாகவும் வெளியேற்றப்படுகிறது.
3. தவளை மற்றும் தலைப்பிரட்டை இரண்டிலும் யூரியாவாக வெளியேற்றப்படுகின்றது
4. தலைப்பிரட்டையில் யூரியாகவும், முதிர்ந்த தவளையில் யூரிக் அமிலமாகவும் வெளியேற்றப்படுகின்றது.

27. இயல்பான நிலையில் பின்வருவனவற்றுள் எது சிறுநீரக குழலில் முழுமையாக உட்கிரகிக்கப்படுகின்றன? (AIPMT 1991)

1. யூரியா
2. யூரிக் அமிலம்
3. உப்புகள்
4. குளுக்கோஸ்

28. கீழ்கண்டவற்றுள் 90% நெ.ஃப்ரானால் உறிஞ்சப்படுவது (AIIMS 27.05.2018 AN)

1. குளுக்கோஸ் மற்றும் அமினோ அமிலம் –செயல்மிகு கடத்தல்
2. குளுக்கோஸ்மற்றும் அமினோ அமிலம் –மந்தமான கடத்தல்
3. $Cl^{-}$,$NH^{3}$,$K^{+}$-மந்தமான கடத்தல்
4. $Cl^{-}$,$NH^{3}$,$K^{+}$- செயல்மிகு கடத்தல்

29. நெ.்.ப்ரானின் எந்த பகுதி நீர் ஊடுருவ முடியாத பகுதியாகும் (AIIMS 2017)

1. அண்மை சுருண்ட குழல் 2.சேய்மை சுருண்ட குழல்

3. ஹென்லி வளைவின் மேல் ஏறும் குழல் 4.ஹென்லே வளைவின் கீழ் இறங்கும் குழல்

30. ஆர்னித்தின் சுழற்சியின் மூலம் கல்லீரலில், இரத்தத்தில் உள்ள இரண்டு கழிவுப்பொருளை நீக்குகிறது அவை (AIPMT 1996)

1. $CO_2$ மற்றும் அமோனியா 2. அமோனியா மற்றும் யூரிக் அமிலம்

3. $CO_2$ மற்றும யூரியா 4. அமோனியா மற்றும் யூரியா

31. மனித சிறுநீரகத்தின் அடிப்படை அலகு. (AIPMT 1997)

1. நெப்ரீடியா 2. ஹென்லேயின் வளைவு 3. நெ.்.ப்ரான் 4.பிரமிடுகள்

32. யுரியோடெலிக் விலங்குகளில் , யூரியா உருவாகும் முறை. (AIPMT 1997)

1. கிர.்.பஸ் சுழற்சி 2. EM வழித்தடம்

3. ஆர்னித்தைன் சுழற்சி 4. கோரி சுழற்சி

33. கூற்று : சிறுநீரகத்தில் உள்ள ட்ரான்ஸ் அமினேஸ் என்சைம்களில் மூலம் அமினோ நீக்கம் உருவாகிறது

காரணம்: ஒரு அமினோ குழுவை அகற்றுவது ($NH_2$) ஒரு அமினோ அமிலத்திலிருந்து யூரியா உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது. (AIIMS 2002)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
3. கூற்று சரி காரணம் தவறு
4. கூற்று தவறு காரணம் சரி

34.பின்வருவனவற்றுள் எது சேய்மை சுருண்டகுழாயில் சோடியம் மீள உறிஞ்சுதலை அதிகரிக்கிறது (AIPMT 2014)

1. ஆல்டோஸ்டீரோன் அளவு அதிகரிப்பு
2. ஆன்டிடையூரிடிக் ஹார்மோன் அதிகரிப்பு
3. ஆல்டோஸ்டீரோன் அளவு குறைதல்
4. ஆன்ட்டையூரிடிக் ஹார்மோன் அளவு குறைதல்

35. கரப்பான் பூச்சியின் உடல் செல்கள் , அதன் ஹீமோலிம்பில உள்ள நைட்ரஜன்__________ ஆக வெளியேற்றுகிறது (AIPMT 2015)

1. பொட்டாசியம் யூரேட் 2. யூரியா

3. கால்சியம் கார்பனேட் 4. அமோனியா

36. மனித சிறுநீர் பொதுவாக அமிலத்தன்மை கொண்டது (AIPMT 2015)

1. வெளியேற்றப்படும் பிளாஸ்மா புரதங்கள் அமிலத்தன்மை கொண்டவை
2. பொட்டாசியம் மற்றும் சோடியம் பரிமாற்றம் ஏற்படுதல்
3. ஹைட்ரஜன் அயனிகள் வடிகட்டலில் தீவிரமாக சுரக்கப்படுகின்றன
4. சோடியம் கடத்திகள் ஒவ்வொரு சோடியம் அயனியையும் ஒரு ஹைட்ரஜன் அயனியாக மாற்றுகிறது

37. பின்வரும் வாக்கியங்களில் கழிவுநீக்கம் தொடர்பான கூற்று எது சரியானது? (AIIMS 2011)

1. சிறுநீரக வடிகட்டுதலில், அதிக அளவு நீரானது அண்மை சுருண்ட குழலிலும், குறைந்த நீரானாது சேய்மை சுருண்ட குழலிலும் மீண்டும் உறிஞ்சப்படுகிறது
2. ஹென்லேயின் வளைவில் கீழிறங்கு குழாயில் உப்புகள் ஊடுருவுதல் இல்லை
3. சிறுநீரகத்தின் மெடுல்லரி பகுதியில் மால்∴பீஜியன் நுண்குழல் காணப்படுகிறது
4. சிறுநீரின் நிறம் வெளிர் மஞ்சள் மற்றும் இயற்கையில் காரத்தன்மை கொண்டது

38. கூற்று : நொதிகள் எதிர்வினை மூலக்கூறின் செயல்படுத்தும் ஆற்றலை குறைத்து இடைபொருள் உருவாக்கவதை எளிதாக்குகிறது (AIIMS 2011)

காரணம் : குறிப்பிட்ட வினையூக்கிகளுக்கு நொதிகள் ஊக்குவிப்பு தளப்பொருளாக உள்ளது

1. கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்
2. கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

39. கூற்று : கிளாமருலார் வடிகட்டுதலின் போது அண்மை சுருண்ட குழலில் உள்ள இரத்த பிளாஸ்மாவானது மிகு அடர்வு தன்மையில் உள்ளது.

காரணம் : அண்மை சுருண்ட குழலில் மட்டுமே $HCo^{-}_{3}$ உறிஞ்சப்படுகிறது.

கொடுக்கப்பட்டுள்ள கூற்று மற்றும் காரணங்களுக்கு உரிய சரியான பதிலை கீழ்காண்பனவற்றில் இருந்து தேர்ந்தெடு: (AIIMS 2012)

1. கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் இக்காரணம் இக்கூற்றை விளக்கவில்லை
3. கூற்று சரி, காரணம் தவறு.
4. கூற்று, காரணம் இரண்டும் தவறு.

40. கூற்று: பெரும்பாலான பூச்சி இனங்களில் மால்பிஜியின் உறுப்புகள் கழிவுநீக்க உறுப்பாக செயல்படுகிறது

காரணம்: இது யூரியா மற்றும் கிரியாடினின் கழிவு நீக்கத்தில் உதவுகிறது.

(AIIMS 25.05.19 FN)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் உண்மை காரணம் சரியானது என்றால் அது கூற்றின் விளக்கமாகும்.
2. கூற்று, மற்றும் காரணம் இரண்டும் உண்மை காரணம் சரியானது என்றால் அது கூற்றின் விளக்கம் இல்லை
3. கூற்று சரியானது என்றால் காரணம் தவறு
4. கூற்று, மற்றும் காரணம் இரண்டும் தவறு

41. பௌமானின் கிண்ணம் மற்றும் கிளாமருலஸ் இவற்றின் பணி என்ன? (AIIMS 25.05.19 AN)

1. இரத்தத்தை வடிகட்டுகிறது
2. அயனிகளை இரத்தத்திலிருந்து திரும்ப உறிஞ்சுகிறது
3. ஹார்மோன்களை இரத்தத்திலிருந்து திரும்ப உறிஞ்சுகிறது.
4. நீரை இரத்தத்திலிருந்து திரும்ப உறிஞ்சுகிறது

42. பின்வருவனவற்றில் எது செல் சவ்வின் அங்கம் இல்லை? (CBSE 2007)

1. கிளைகோலிப்பிடுகள்
2. ப்ரோலின்
3. பாஸ்போலிப்பிட்கள்
4. கொழுப்பு

43. பாலூட்டிகளில் எந்த இரத்த நாளத்தில் இயல்பாக அதிகமான யூரியா காணப்படுகிறது ? (CBSE 2016 P1)

1. சிறுநீரக சிரை
2. பெருந்தமனி
3. கல்லீரல் சிரை
4. கல்லீரல் போட்டல் சிரை

44. சிறுநீரில் அடர்வு மிகு நிலை எவ்வுறுப்பைச் சார்ந்தது ? (AIPMT 2000)

1. பௌமாணியன் கிண்ணம்
2. ஹென்லி வளைவு நீளம்
3. PCT (அண்மை சுருண்ட சிறுநீரக குழல்)
4. கிளாம‘ரூலஸில் காணப்படும் இரத்த நாள பின்னல்

45. அம்மோனியா, யூரியாவாக மாறும் சுழற்சி ? (AIPMT 2000)

1. ஆர்னித்தைன் சுழற்சி
2. அர்ஜினைன் சுழற்சி
3. பியுமாரிக் சுழற்சி
4. சிட்ருலின் சுழற்சி

46. எந்தப் பகுதியில் மட்டும தன்னிச்சையான தசைகள் இல்லை (AIPMT 1998)

1. சிறுநீர்புறவழி
2. ஐரிஸ்
3. இதய தசைகள்
4. இரத்த நாளங்கள்

47. கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது? உயிரினங்களின் உடலின் உட்புறத்தில் உப்பு-நீர் சமநிலையை பராமரிக்கும் நிகழ்வு (AIIMS 2005)

1. நீர் கிடைக்காத சூழலில் ஒட்டகங்கள் சிறுநீர் உற்பத்தி செய்யாமல் யூரியாவை திசுக்களில் சேமிக்கிறது.
2. சால்மன் மீன்கள் அதிகளவு உப்புக்களை செவுள்கள் மூலமாக நன்னீரில வாழும்போது வெளியேற்றுகிறது.
3. பரமீசியம் சுருங்கும் நுண்குழல்கள் மூலம் அடர்வு மிகுந்த உப்புக்கரைசல்களை வெளியேற்றுகிறது.
4. நன்னீரில் வாழும் விலங்குகள் சூழ்நிலையைவிட குறைந்த ஒப்படர்வு கொண்ட உடல் திரவங்களை கொண்டிருக்கும்.

48. கூற்று: பாலாடை கட்டி தயாரிப்பில் பாலை தயிராக்குதல் முறை பயன்படுகிறது.

காரணம்: இந்த முறைக்கு லாக்டிக் அமில பாக்டீரியா பயன்படுகிறது. (AIIMS 2016)

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கம் ஆகும்.
2. கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கம் இல்லை.
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

49. நெப்ரானின் எந்தப் பகுதியில் கிளாமருலால் வடி திரவத்திலிருந்து அதிகப் படியான மின்பகுளிகள் மற்றும் நீர் (70%-80%) மறு உறிஞ்சப்படுகிறது. (AIPMT PRE 2012)

1. ஹென்லி வளைவின் கீழிறங்கு குழாய்
2. ஹென்லி வளைவின் மேலேறும் குழல்
3. சேய்மை சுருள் நுண்குழல்
4. அண்மை சுருள் நுண்குழல்

50. கிளாமருலார் வடிதிரவத்திலுள்ள அதிகளவிலான எலக்ட்ரோலைட் மற்றும் நீர் (70-80%) நெப்ரானின் எந்த பகுதியில் மீள உறிஞ்சப்படும்? (AIPMT PRE 2012)

1. அண்மை சுருண்ட குழல்
2. ஹென்லே வளைவின் இறங்கு குழல்
3. ஹென்லே வளைவின் ஏறுகுழல்
4. சேய்மை சுருண்ட குழல்

51. பின்வருவனவற்றில் எந்த பொருள் சிறுநீரகத்தின் குழல்களில் கிளாமரூலார் வடிகட்டுதலில் செயல்மிக்க சுரப்பி பொருள் (AIIMS 1998)

1. அமினோ அமிலம்
2. குளோரைடு அயனிகள்
3. சோடியம் அயனிகள்
4. பொட்டாசியம் அயனிகள்

52. கீழ்க்கண்டவற்றில் எது யூரிக் அமிலத்தை கழிவுநீக்கம் செய்கிறது? (AIIMS 1998)

1. மீன்கள் 2. இருவாழ்விகள் 3. பறவைகள் 4. பாலூட்டிகள்.

53. உடலில் யூரிக் அமிலம் உருவாக்கப்படுவது எதனால் ? (AIIMS 26.05.2018 AN)

1. பாஸ்போலிப்பிடுகள் 2. குளுக்கோஸ்

3. DNA டி.என்.ஏ 4. RNA ஆர்.என்.ஏ

54. பெரும்பாலான நீர்வாழ்விலங்குகள் அம்மோனியா நீக்கிகளாக காணப்படுவதற்கான காரணம் (AIIMS 2000)

1. குறைந்த அளவு சூரிய ஒளி பெறுதல்
2. நீரில் குறைந்த அளவு N2 காணப்படுதல்
3. அம்மோனியாவை வெளியேற்ற அதிக அளவு நீர் இவ்விலங்குகளுக்கு கிடைத்தல்
4. உடலில் நீர் ஊடுருவுவதை கட்டுப்படுத்த அம்மோனியா உதவுகிறது.

55. வரைபடம் காண்பிப்பது Aலிருந்து D - வரை பாகத்துடன் கூடிய மனித சிறுநீரக மண்டலத்தின் வரைபடம் ஆகும். சரியானவற்றை கண்டறிந்து அதனுடைய பண்பு மற்றும் வேலைகளை தேர்வு செய்க (AIPMT 2013)




1. A - அட்ரினல் சுரப்பி - சிறுநீரகத்தின் மேல்பக்கத்தில் அமைந்துள்ளது. கிளைக்கோஜன் உடைதலைத் தூண்டும் கேட்டகோலமைனை சுரக்கிறது.
2. B - பெல்விஸ் - அகலமான புனல்படிவ இடம் ஹைலத்தின் உள்புறம் உள்ளது. ஹென்லி வளைவுகள் நேராக இணைக்கப்பட்டுள்ளது.
3. C - மெடுல்லா - சிறுநீரகத்தின் உள் அமைவிடம் மற்றும் முழுமைபெற்ற சிறுநீரக அலகுகளால் ஆனது
4. D - கார்ட்டெக்ஸ் - சிறுநீரகத்தின் வெளிப்பகுதி - இப்பகுதி சிறுநீரக அலகின் எந்த ஒரு பகுதியையும் கொண்டில்லை.

56. நைட்ரஜன் கழிவுகளை யூரிக் அமிலமாக உடலிலிருந்து வெளியேற்றும் உயிரிகளுக்கு இரு எ.கா. (AIPMT 1994)

1. பறவைகள் மற்றும் ஊர்வன
2. தவளை மற்றும் குருத்தெலும்பு மீன்கள்
3. பூச்சிகள் மற்றும் எலும்பு மீன்கள்
4. பாலூட்டிகள் மற்றும் மெல்லுடலிகள்.

57. கீழே கொடுக்கபட்டவற்றுள்ள நான்கு பாகங்களில் எவை சிறுநீரக நுண்குழல்களில் அமையப்பெறாதது. (AIPMT 1994)

1. சேய்மை சுருண்ட நுண்குழல்
2. சேகரிக்கும் குழாய்
3. பௌமனின் கிண்ணம்
4. ஹென்லே வளைவு.

58. அதிகபடியான நீரானது சிறுநீரகத்தால் சேகரிக்கபடாமல் திசுக்களிலிருந்து வெளியே கடத்தப்பட்டால், செல்லின் நிலை. (AIPMT 1994)

1. வெடித்தல் மற்றும் இறத்தல்
2. பிளாஸ்மாவிலிருந்து நீரேற்றம்
3. எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை
4. சுருங்குதல் மற்றும் இறத்தல்.

59. சிறுநீரகத்தின் வடிகட்டுதல் நிகழ்வு எதனால் நிகழ்கிறது. (AIIMS 1999)

1.இரத்த அழுத்தம்
2. மீள உறிஞ்சுதல்
3.இரத்த ஓட்டம்.
4. சவ்வூடு பரவல் நிகழ்வு

60. நீர் மட்டுமே அருந்திக் கொண்டு நீண்ட நாள் உண்ணாவிரதம் இருப்பவ்ரின் உடலில் காணப்படுவது (AIPMT 2007)

1. சிறுநீரில் குறைந்த அளவு யூரியா
2. சிறுநீரில் அதிக அளவு சோடியம்
3. அவரின் சிறுநீரில் குறைந்த அளவு அமினோ அமிலம்
4. இரத்தத்தில் அதிக அளவு குளுக்கோஸ்

61. ஆர்னித்தைன் சுழற்சியில் கீழ்கண்ட எந்த கழிவுப் பொருட்கள் இரத்தத்திலிருந்து நீக்கப்படுகிறது (AIPMT 2005)

1. கார்பன்-டை-ஆக்ஸைடு ($CO_2$) மற்றும் அம்மோனியா
2. அமோனியா மற்றும் யூரியா
3. கார்பன்-டை-ஆக்ஸைடு ($CO_2$) மற்றும் யூரியா
4. யூரியா மற்றும் சிறுநீர்

62. கிளாமருபலிருந்து வடிதிரவத்தை நுண்குழலுக்கு செலுத்த காரணமான நிகர அழுத்தம் (AIPMT 2005)

1. 10mm Hg
2. 50mm Hg
3. 75mm Hg
4. 30mm Hg

63. ஒரு மனிதன் தொடர்ந்து விரதம் இருப்பானேயானால் அவனின் சிறுநீரில் அளவுக்கு அதிகமான கீழ்கண்ட எந்த பொருள் இருக்கும் (AIPMT 2005)

1. கொழுப்பு
2. அமினோ அமிலம்
3. கீட்டோன்கள்
4. குளுக்கோஸ்

64. கொடுக்கப்பட்டுள்ள உயிரினங்களில் எதனுடைய கழிவுநீக்க உறுப்பு சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது? (CBSE FINAL 2010)

1. மனிதன் - சிறுநீரகம், எண்ணெய் சுரப்பிகள் மற்றும் கண்ணீர் சுரப்பிகள்
2. மண்புழு - தொண்டை, தோல், இடைச்சுவர், நெஃப்ரீடியங்கள்
3. கரப்பான் பூச்சி - மால்பீஜியன் நுண்குழல்கள், வயிற்றுப்புற நீட்சிகள்
4. தவளை - சிறுநீரகம், தோல், வாய்க்குழி எபிதீலியம்

65. கூற்று : இறுதியாக சிறுநீரில் இருந்து நீர் சேகரிப்பு நாளத்தின் வழியாக மீண்டும் இரத்தத்திற்குள் உறிஞ்சப்படுவதால் மனித நெப்ரானில் அடத்திமிகு சிறுநீர் உருவாகிறது.

காரணம் : மனித சிறுநீரகத்தின் கார்கல் இன்டர்ஷீயத்தின் (intersitium) ஆழத்தில் காணப்படும் சோடியம் கிரேயன்ட் உருவாவதற்கு ஹென்லேயின் வளைவே காரணம் (AIIMS 1996)

1. கூற்று மற்றும் காரணம் சரி, காரணம், கூற்றிக்கான சரியான விளக்கமாகும்.
2. கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
3. கூற்று சரி காரணம் தவறு.
4. கூற்று மற்றும் காரணம் தவறு.

66. வளிமண்டலத்தில் வெப்பநிலை அதிகரிப்பதற்கு கீழ்காணும் எந்த வாயுக்கள் காரணமாகின்றன? (AIIMS 26.05.19 AN)

1. $CO$, $NO_2$, $H_2S$
2. $CO_2$, $CO$, $NO$
3. $CH_4$, $CO_2$, $N_2O$
4. $NO_2$, $H_2S$, $CO_2$

67. உயிரி எரிவாயுவில் எந்த வாயு முக்கியமாக உள்ளது ? (AIIMS 26.05.19 AN)

1. மீத்தேன்
2. ஈத்தேன்
3. பியூட்டேன்
4. புரோப்பேன்

68. இரத்த சிவப்பணுக்களின் உற்பத்தியை தூண்டக் கூடிய எரித்ரோபொய்டின் ஹார்மோன் உருவாகும் இடம். (AIPMT MAIN 2012)

1. அடினோஹைபோபைசிசில் உள்ள ரோஸ்ட்ரல் செல்கள்
2. எலும்பு மஜ்ஜையின் செல்கள்
3. சிறுநீரகத்திலுள்ள ஜக்ஸ்டா கிளாமருலர் செல்கள்
4. கணையத்தின் ஆல்பா செல்கள்

69. கீழ்கண்டவற்றுள் உயிரினங்களில் காற்றறைகளை கொண்ட எலும்புகளையுடைய உயிரி. (AIPMT MAIN 2012)

1. ஹெமிடாக்டைல்ஸ்
2. மேக்ரோப்பஸ்
3. ஆர்னிதோரைன்கஸ்
4. நியோஃப்ரான்.

70. லிப்பிடுகளை பற்றிய அறிக்கைகள் பின்வருமாறு (AIPMT MAIN 2012)

(a). ஒற்றை பிணைப்புகளை மட்டும் கொண்ட லிப்பிட்டுகள் நிறைவுறா கொழுப்பு அமிலங்கள் எனப்படும்.

(b). லெசித்தின் ஒரு பாஸ்போலிப்பிட்

(c). டிரைஹைட்ராக்ஸி புரோபேன் என்பது கிளிசரால்

(d). பால்மிடிக் அமிலம் கார்பாக்சைல் கார்பன் உட்பட 20 கார்பன்களைக் கொண்டது.

(e). ஆர்க்கிடோனின் அமிலம் 16 கார்பன் அணுக்களைக் கொண்டுள்ளது.

1. (c) மற்றும் (d) மட்டும் 2. (b) மற்றும் (c) மட்டும்

3. (b) மற்றும் (d) மட்டும் 4. (a) மற்றும் (b) மட்டும்.

71. கிரியாட்டினின் இதனால் உருவாகிறது? (AIIMS 27.5.2018 FN)

1. யூரியா
2. யூலரிக் அமிலம்
3. தசைகளில் கிரியாட்டியன் பாஸ்பேட் உடைவதால்
4. சிறுநீரகம்

72. கூற்று : பெரும்பான்மையான எலும்பு மீன்கள் அம்மோனியாவை கழிவுப் பொருளாக வெளியேற்றுபவை (AIIMS 27.5.2018 FN)

காரணம்: அமோனியா எளிதில் நீரில் கரையும்

1. கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் தவறு

73. முதிர்ந்த முயலின் சிறுநீரக வகை (AIPMT 1992)

1. புரோநெப்ரான்கள் 2. மெட்டா நெப்ரான்கள்

3. மீசோ நெப்ரான்கள் 4. ஒபிஸ்தோ நெப்ரான்கள்

74. கிளாமருலர் வடி திரவத்தில் இருந்து குளுக்கோஸானது இம்முறையில் திரும்ப பெறப்படுகிறது? (AIPMT 1993)

1. செயல்மிகு கடத்தல் 2. செயலற்ற கடத்தல்

3. சவ்வூடு பரவல் 4. பரவல்.

75. பைட்டோட்ரான் என்பது ? (AIPMT 1999)

1. கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் தாவரங்களை வளர்ப்பதற்கான ஒரு சாதனம்
2. பசுமை இல்லங்களில் தாவரங்களை வளர்ப்பது

3. கதிர்வீச்சு அறையின் மூலம் திடீர் மாற்றத்தினை தூண்டுதல்.

4. ஒளியின் விளைவைப் படிக்கும் கருவிகளை தாவரங்களில் பயன்படுத்துதல்

76. அதிவேக வளர்ச்சி இவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது (AIPMT 1999)

1. ஒரு செல் உயிரினங்கள்
2. திசு வளர்ப்பில் ஒரு செல்
3. கரு
4. பல செல் தாவரங்கள்

77. டயட்டோமேசியஸ் படிவபாறை கொதிகலன்கள் மற்றும் நீராவி குழாய்களின் வெப்ப அரிதி கடத்தி பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் டையாட்டமின் செல்சுவர் இதனால் ஆக்கப்பட்டது? (AIPMT 1999)

1. இரும்பினால் ஆனது
2. சிலிக்கன் டை ஆக்ஸைடால் ஆனது
3. வெப்ப கடத்தி
4. மின்சார குறை கடத்தி

78. இரத்தத்தில் யூரியாவின் அளவு அதிகரிப்பது இதன் வடிகட்டுதல் பற்றாக்குறையால்(AIIMS 2014)

1. ஹென்லே வளைவு
2. சேய்மை குழல்
3. பௌமானின் கிண்ணம்
4. சேகரிக்கும் நுண்குழல்

79. நெப்ரானின் எந்த பகுதியில் சோடியம் மீள உறிஞ்சப்படுகிறது ? (CBSE 2016 P II)

1. சேய்மை சுருண்ட குழல்
2. அண்மை சுருண்ட குழல்
3. பௌமானின் கிண்ணம்
4. கீழிறங்கு ஹென்லே வளைவு

80. பொருத்துக ( CBSE 2018 )

| களம் - I | | களம் II | |
|---|---|---|---|
| a. | கிளைகோசுரியா | i | மூட்டுகளில் யூரிக் அமிலம் படிதல் |
| b. | கௌட் | ii | படிக உப்புகள் அதிகளவு சிறுநீரகத்திற்குள் தங்குதல் |
| c. | ரீனல் கால்குலஸ் | iii | க்ளாமருலர் வீக்கம் |
| d. | க்ளாமருலஸ் நெ.்.ப்ரிடிஸ் | iv | சிறுநீர் குளுக்கோஸ் காணப்படும் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| 1. | iii | ii | iv | i |
| 2. | iv | i | ii | iii |
| 3. | ii | iii | i | iv |
| 4. | i | ii | iii | iv |

81. பொருத்துக ( CBSE 2018 )

| செயல் | | கழிவுநீக்க பகுதி |
|---|---|---|
| a. நுண்வடிகட்டுதல் | - | i) ஹென்லே வளைவு |
| b. அடர்மிகு யூரின் | - | ii) சிறுநீர் குழாய் |
| c. சிறுநீர் கடத்தல | - | iii) சிறுநீர்ப்பை |
| d. சிறுநீர் சேகரிப்பு | - | iv) மால்பிஜியன் வடிகட்டி |
| | - | v) அண்மை சுருண்ட குழல் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| 1. | iv | v | ii | ii |
| 2. | v | iv | i | ii |
| 3. | v | iv | i | ii |
| 4. | iv | i | ii | iii |

82. கிளாமருலார் வடி திரவத்தில் உள்ள உபயோகமான பொருட்களின் மறு உறிஞ்சுதல் இங்கு நடைபெறுகிறது (AIPMT 1989)

1. சேகரிக்கும் குழல்
2. ஹென்லேயின் வளைவு
3. அண்மை சுருண்ட குழல்
4. சேய்மை சுருண்ட குழல்

83. பின்வரும் எந்த மூளை நரம்பு இதய துடிப்பை ஒழுங்குப்படுத்துகிறது? (AIPMT 1989)

1. X 2. IX 3. VIII 4. VII

84. சிறுநீரில் இரத்த சிவப்பணுக்கள் காணப்படும் நிலை (AIPMT 1988)

1. அல்காப்டோனூரியா
2. யூரோதியாசிஸ்
3. ஹிமட்யூரியா
4. புரோட்டீனூரியா

85. சிறுநீரில் கீழ்க்கண்ட எந்த பொருள் காணப்பட்டால் டயாபிட்டிஸ் மெல்லிட்டஸிற்கு அறிகுறியாகும்? (NEET 2020)

1. யுரோமியா மற்றும் கீட்டோனூரியா
2. யுரேமியா மற்றும் சிறுநீர் கற்கள்
3. கீட்டோனூரியா மற்றும் கிளைகோசூரியா
4. சிறுநீர் கற்கள் மற்றும் உயர் கிளைகோசூரியா

86. கொடுக்கப்பட்டுள்ள உயிரிகளையும் அவற்றின் பண்புகளையும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a) | பைலா | i) | சுடர் செல்கள் |
| b) | பாம்பிக்ஸ் | ii) | சீப்புத் தட்டுகள் |
| c) | ப்ளுரோபிராக்கியா | iii) | ராடுலா (அ) நாக்கரம் |
| d) | டீனியா | iv) | மால்பீஜியன் குழல்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| 1. | (ii) | (iv) | (i) | (iii) |
| 2. | (v) | (i) | (ii) | (iii) |
| 3. | (ii) | (iv) | (iii) | (i) |
| 4. | (v) | (iv) | (i) | (iii) |

87. கொடுக்கப்பட்டுள்ள எந்த காரணி அடர் சிறுநீர் உருவாக்கத்திற்கு காரணமாக உள்ளது (NEET 2019)

1. கிளாமருலார் வடிகட்டுத்தலின் போது நிலை நீர்ம அழுத்தம். உள்ளதால்
2. குறையளவு ஆன்டிடையூரிட்டிக் ஹார்மோன் உள்ளதால்
3. சிறுநீரகத்தின் உள் மெடுலரி இண்டர்ஸ்டீஷியத்தினை நோக்கி உயர் ஆஸ்மோலாரிட்டி பராமரிக்கப்படுவதால்
4. ஜக்ஸ்டாகிளாமருலால் கூட்டமைவு எரித்தோபாய்டினை சுரப்பதால்

88. கொடுக்கப்பட்டுள்ள எந்த நடைமுறை வளிமண்டலத்தில் குளோரோ.:.புளுரோ கார்பனின் உமிழ்வை குறைக்க முனைகிறது (NEET 2019)

1. ஜெனிவா உடன்படிக்கை
2. மான்டீரியல் உடன்படிக்கை
3. சயோடோ நடைமுறை
4. காதன் பர்கு நடைமுறை

89. ஹீமோடையாலிசிஸின் போது செயற்கை சிறுநீரகத்தை உபயோகிப்பதால் ஏற்படும் விளைவுகள் (NEET 2019)

1. உடலில் நைட்ரோஜீனஸ் கழிவுபொருள் சேர்தல்
2. அளவிற்கு அதிகமாக உள்ள பொட்டாசிய அயனிகள் நீக்கப்படுவதில்லை
3. உணவு பாதையில் கால்சியம் அயனிகளின் உட்கிரகித்தல் குறைகிறது
4. RBC உற்பத்தி குறைகிறது

கீழ் கொடுக்கப்பட்டவையில் பொருத்தமான விடையை தேர்ந்தெடு

1. (a) மற்றும் (d) சரி
2. (b) மற்றும் (b) சரி
3. (b) மற்றும் (c) சரி
4. (c) மற்றும் (d) சரி

90. மனிதனின் இரத்தவகை பாரம்பரியத்தை சரியாக விளக்குவது எது ? (NEET – 2018)

a. நிறை யோங்கல்

b. துணை யோங்கல்

c. பல கூட்டு அலீல்கள்

d. குறையோங்கல்

e. பல மரபணு பாரம்பரியம்.

1. a, b மற்றும் c
2. b, d மற்றும் e
3. b,c மற்றும் e
4. a,c மற்றும் e.

91. கீழ்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து தொகுதி I மற்றும் தொகுதி II–ஐ பொருத்தி எழுதுக (NEET – 2018)

| தொகுதி I | தொகுதி II |
|---|---|
| 1. கிளைகோசூரியா | - மூட்டுகளில் யூரிக் அமிலம் சேர்தல் |
| 2. கௌட் | - சிறுநீரகத்திற்குள் காணப்படும் கன படிகமான உப்புகள் |
| 3. ரீனல் கால்குலை | - குளோமஷருளையில் ஏற்படும் சுழற்சி |
| 4. குளோமருலார் நெ.்.ப்ரிட்டிஸ் | - சிறுநீரில் குளுக்கோஸ் உள்ளது. |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| 1 | (i) | (ii) | (iii) | (iv) |
| 2 | (ii) | (iii) | (i) | (iv) |
| 3 | (iii) | (ii) | (iv) | (i) |
| 4 | (iv) | (i) | (ii) | (iii) |

92. கீழ்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து தொகுதி I மற்றும் தொகுதி II–ஐ பொருத்தி எழுதுக (NEET – 2018)

| தொகுதி I (செய்கள் | தொகுதி II (கழிவு நீக்கதொகுதியின் பகுதி) |
|---|---|
| 1. நுண் வடிகட்டி | - i. ஹென்லி வளைவு |
| 2. சிறுநீரின் அடர்வு | - ii. யூரேட்டர் |
| 3. சிறுநீர் கடத்தப்படுதல் | - iii. சிறுநீர் பை |
| 4. சிறுநீர் சேகரிப்பு | - iv. மால்.்.பிஜியன் கார்புசெல் |
| | - v. முதன்மை வளைகுழாய் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| 1 | (iv) | (i) | (ii) | (iii) |
| 2 | (v) | (iv) | (i) | (ii) |
| 3 | (iv) | (v) | (ii) | (iii) |
| 4 | (v) | (iv) | (i) | (iii) |